




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 250 04.03.2026 WEDNESDAY MAASI : 20 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 250 04.03.2026 புதன்கிழமை மாசி : 20 விலை : ரூ.5/–


## முதியோர், மாற்றுத் திறனாளி உதவித்தொகை பெறுவோருக்கு தமிழக அரசு

# "ரூ.2,000 சிறப்பு நிதி வரவு!"

சென்னை: மார்ச்.4-

தமிழக அரசின் மாத ஓய்வூதிய உதவித் தொகை பெற்று வரும் முதியோர், கணவரை இழந்த பெண்கள், வயது முதிர்ந்த திருநங்கையர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு மார்ச் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து ரூ.2000 சிறப்பு நிதி வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில், "கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் பெண்களுக்குக் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கியது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, சமூகத்தின் விளிம்புநிலையில் வாழ்ந்து, அரசின் மாத ஓய்வூதியத் உதவித்தொகை பெற்று வரும் முதியோர், கணவரை இழந்த



பெண்கள், வயது முதிர்ந்த திருநங்கையர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கும் இத்தகைய சிறப்பு நிதியை வழங்கிட வேண்டும் எனக் கோரிக்கைகள் வந்தன.

நம்பிக்கையுடன் அவர்கள் வைத்த கோரிக்கையை இன்று நிறைவேற்றியுள்ளோம். நலிவு நிலை போக்கும் சிறப்பு நிதியாக 2000 ரூபாயை மார்ச் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வங்கிக் கணக்கில் வரவு வைத்துள்ளோம்!

இதன்படி, பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் பயன்பெற்று வரும் முதியோர், கணவரை இழந்த பெண்கள் என, மொத்தம் 29 இலட்சத்து 29 ஆயிரம் பயனாளிகளுக்கு தலா 3200 ரூபாயும், 5 இலட்சத்து 92 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளுக்கு தலா 3500 ரூபாயும், பராமரிப்பு உதவித்தொகை பெற்றுவரும் 2 இலட்சத்து 58 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு, தலா 4000 ரூபாயும் இன்று காலை வழங்கியிருக்கிறோம்.

அதுமட்டுமின்றி, மீனவர் குடும்பங்களுக்கு ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலத்திற்கான மீன்பிடித் தடை கால உதவித்தொகையாக, குடும்பம் ஒன்றுக்கு ரூ.8000 வீதம் மொத்தம் 1,62,900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 14,870 தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில், 15 கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்குக் கிலோ இரண்டு ரூபாய் ஆதார விலை என 8.53 கோடி ரூபாய் நிதி வழங்கப்படுகிறது.

இந்தத் தருணத்தில் மீண்டும் ஒருமுறை சூளுரைக்கிறேன்

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விட மாட்டோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்



## ஒரே நாளில் 200 விக்கெட்டுகள் அதிமுகவை அலறவிடும் ஓபிஎஸ் ஆதரவாளர்கள்

## அமைச்சர் முன்னிலையில் ஐக்கியம்

திண்டுக்கல், மார்ச்.4-

தமிழக அரசியலில் அதிரடி மாற்றமாக, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் திமுகவில் இணைந்ததைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் அவரது ஆதரவாளர்கள் திமுகவில் இணைந்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக, திண்டுக்கல் மாவட்டத்தில் அதிமுக ஓபிஎஸ் அணியைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர்கள் உட்பட 200க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் இன்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் அதிகாரப்பூர்வமாக திமுகவில் இணைந்தனர்.

திண்டுக்கலில் பலமான சரிவு

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.பி. பசும்பொன் தலைமையில் 200 பேர் மற்றும் தெற்கு மாவட்டச் செயலாளர் வைகை பாலன் தலைமையில் மாவட்ட, ஒன்றிய மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் எனப் பெரும் பட்டாளமே திமுக அலுவலகத்தில் திரண்டனர். அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்குச் சால்வை அணிவித்துத் தங்களைத் தாய் கழகமான திமுகவில் இணைத்துக்கொண்டனர்.

அமைச்சர் ஐ.பெரியசாமியின் 'மாஸ்' வரவேற்பு

புதிதாக இணைந்த நிர்வாகிகளுக்கு திமுக சின்னம் பொறித்த துண்டுகளை அணிவித்து வரவேற்ற அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதாவது:

"அண்ணன் ஓ.பி.எஸ் அவர்கள் திமுகவில் இணைந்தது மகிழ்ச்சி. பிரிந்து சென்றவர்கள் மீண்டும் தாய் கழகத்திற்கே வந்துள்ளீர்கள். திராவிட இயக்கமான இங்கு உங்களிடம் யாரும் பாகுபாடு காட்ட மாட்டார்கள். அனைவரும் தோழமையோடு பணியாற்றுவோம். வரும் 2026 தேர்தலில் திமுக கூட்டணியைப் பெரும் வெற்றி பெற வைத்து, ஓபிஎஸ் அவர்களுக்குத் துரோகம் செய்த எடப்பாடி பழனிசாமிக்குத் தக்க பாடம் புகட்டுவோம்!"

இந்த பேச்சைக் கேட்டு அங்கிருந்த நிர்வாகிகள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

இந்நிகழ்வில் ரெட்டியார்சத்திரம் ஒன்றிய செயலாளர் சின்னத்தம்பி, தெற்கு ஒன்றிய செயலாளர் செந்தில்குமார், இளைஞரணி செயலாளர் வர்கீஸ், மகளிர் அணி செயலாளர் வத்தலக்குண்டு புவனா உள்ளிட்ட பல மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர். திமுக தரப்பில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன் மற்றும் மாநகர நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர்.

## வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பள்ளிக்கட்டிடம், பேருந்து நிலையம்: உதயநிதி திறந்துவைத்தார்

சென்னை: மார்ச்.4-

வடசென்னை வளர்ச்சிக் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில், ரூ.53 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள சென்னை நடுநிலைப் பள்ளிக்கட்டிடம், பேருந்து நிலையம், விளையாட்டு வளாகம் ஆகியவற்றை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்துவைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாதவரம் தொகுதிக்கு உட்பட்ட புழல் மகாலஷ்மி நகரில் அமைந்துள்ள மாதவரம் ஊராட்சி ஒன்றிய பள்ளி, கடந்த 1967ம் ஆண்டு அண்ணா முதல்வராக இருந்த போது திறக்கப்பட்டது.

இந்நிலையில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சிஎம்டிஏ சார்பில், ரூ.12.39 கோடி செலவில் 37,342 சதுரஅடி கட்டிடப் பரப்பளவில் தரை தளம் மற்றும் மூன்று தளங்களுடன் சென்னை நடுநிலைப் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

இதில், 27 வகுப்பறைகள், தலைமை ஆசிரியர் அறை, ஆசிரியர்கள் அறை, பதிவு



அறை, 2 ஆய்வகங்கள், உடற்கல்வி கூடம், நூலகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, சேமிப்பு அறை, ஆண்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

ஆர்.கே.நகர் தொகுதியில், சிஎம்டிஏ சார்பில் ரூ.21.95 கோடியில் தரைதளம் மற்றும் 2 தளங்களுடன் தண்டையார்ப்பேட்டை பேருந்து நிலையம், 37,157 சதுர அடி கட்டிடப் பரப்பளவில் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் ஆர்.கே.நகர் விளையாட்டு வளாகம் கட்டப்பட்டுள்ளது.

இவற்றை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். அதேபோல், ராயபுரம் மண்டலம், வார்டு52, கல்லறை சாலையில் ரூ.10.32 கோடியில் கட்டப்பட்டுள்ள கலைஞர் திருமண மாளிகை, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு73, புளியந்தோப்பு, திருவேங்கடசாமி தெரு சென்னை தொடக்கப் பள்ளியில் ரூ.5.01 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தையும் திறந்தார்.

மேலும், தண்டையார்பேட்டை மாநகர் போக்குவரத்துக் கழக பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.33.82 கோடி மதிப்பில், மேம்படுத்தப்பட்ட தண்டையார்பேட்டை1 மின்சாரப் பேருந்து பணிமனையைத் திறந்துவைத்து, ரூ.170 கோடி மதிப்பிலான 100 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அதைத்தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 750 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கப்படுவதற்காக ரூ.289 கோடி மதிப்பீட்டில் மின்னேற்ற வசதிகளுடன் மின்சாரப் பணிமனைகளாக மேம்படுத்துதல் மற்றும் புதிய பணிமனைகள் அமைக்கும்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., மாதவரம் எஸ்.சுதர்சனம் உள்ளிட்ட எம்எல்ஏ.க்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

## "சிறப்பு நிதி எனும் திமுகவின் தேர்தல் சித்து விளையாட்டு எடுபடாது" : தினகரன்

சென்னை: மார்ச்.4-

'சிறப்பு நிதி எனும் திமுகவின் தேர்தல் கால சித்து விளையாட்டுக்கள் பொதுமக்கள் மத்தியில் எடுபடாது. திடீர் பாதுகாவலர் வேஷம் போடும் திமுகவை வீட்டிற்கு அனுப்பும் முடிவிலிருந்து தமிழக மக்கள் பின்வாங்க மாட்டார்கள்' என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழக அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாத ஓய்வூதியம் மற்றும் உதவித் தொகை பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள், திருநங்கையர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு 2 ஆயிரம் ரூபாய் சிறப்பு நிதியாக வரவு வைக்கப்பட்டிருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக திமுக வழங்கிய தேர்தல் அறிக்கையில் 322வது வாக்குறுதியான முதியோர் உதவித் தொகை 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்ற வாக்குறுதியை ஆட்சி நிறைவடையும் தறுவாயிலும் நிறைவேற்றாமல் ஏமாற்றிக் கொண்டிருக்கும் திமுக அரசு, தற்போது சிறப்பு நிதி எனும் பெயரில் 2000 ரூபாய் வழங்கியிருப்பது முழுக்க முழுக்க ஏமாற்று வேலையே ஆகும்.

அண்டை மாநிலங்களைப் போல மாதாந்திர உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என ஜனநாயக ரீதியில் போராடிய மாற்றுத்திறனாளிகளின் மீது காவல்துறையை ஏவி அடக்குமுறைக்கு உள்ளாக்கிய திமுக அரசு, தேர்தல் நெருங்கும் நேரத்தில் இதுபோன்ற அறிவிப்புகளை வெளியிடுவதன் மூலம், மக்கள் நலனுக்கான நிரந்தர தீர்வை எட்டுவதை விட்டுவிட்டு அவர்களை வெறும் தேர்தல் நேர வாக்குவங்கியாக மட்டுமே பார்ப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

எனவே, கடந்த ஐந்தாண்டுக் கால இருண்ட ஆட்சியில் அனைத்து தரப்பு மக்களையும் வாட்டி வதைத்துவிட்டு தற்போது திடீர் பாதுகாவலர் வேஷம் போடும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் இதுபோன்ற தேர்தல்கால சித்து விளையாட்டுக்களை நம்பி தமிழக மக்கள் ஏமாற மாட்டார்கள் என்பதோடு, வரும் தேர்தலில் திமுவை வீட்டிற்கு அனுப்பும் முடிவிலிருந்து துளியளவும் பின்வாங்க மாட்டார்கள் என்பதையும் இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்தார்.

## "பாஜகவை எதிர்த்துப் பேச விஜய்க்கு பயம்"

### திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன்

சென்னை: மார்ச்.4-

"திமுக காங்கிரஸ் கூட்டணி விவகாரத்தை சுமுகமாக முடிக்கவே எங்கள் தலைவர் விரும்புவார். இன்று மாலைக்குள் நல்ல செய்தி வரும். பாஜகவை எதிர்த்துப் பேச விஜய் பயப்படுவார்" என திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "அவர்கள் (காங்கிரஸ்) கேட்பது வேறு, நாம் (திமுக)



சொல்வது வேறு. திமுக காங்கிரஸ் கூட்டணி விவகாரத்தை சுமுகமாக முடிக்கவே எங்கள் தலைவர் (முதல்வர் ஸ்டாலின்) விரும்புவார். காங்கிரஸார் இப்போது பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கிறார்கள் என்றாலே பழைய நிலைப்பாட்டில் இருந்து மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் பொருள். இன்று மாலைக்குள் நல்ல செய்தி வரும்.

தவெகவினருக்கு அரசியலே தெரியாது. விஜய் முதல்வராக வேண்டும் என்ற ஒற்றைக் குறிக்கோளோடு வந்திருக்கிறார். அவரின் கேள்விகளுக்கு நாங்க பதில் கூற முடியாது. அவர் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென அரசியலுக்கு வரவில்லை. தைரியம் இருந்தால் விஜய் மணிப்பூரை பற்றி பேசட்டும். பாஜகவை எதிர்த்துப் பேச விஜய் பயப்படுவார்" என்றார்.

நாங்குநேரி கொலை சம்பவம் குறித்து கூறும்போது, "சட்டம் தன் கடமையை செய்கிறது. எந்தக் குற்றவாளியும் தப்பிக்கவில்லை. எடப்பாடி முதல்வராக இருந்த காலத்தில், கோடநாட்டில் கொள்ளையடித்தவர்கள் கூட தப்பிவிட்டார்கள். திமுக ஆட்சியில் காவல் துறைக்கு ஒரு புகார் வந்தால் கூட, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது" என்று அவர் தெரிவித்தார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000

# நாட்டிலேயே மிக நீளமான காற்றாலை இறக்கையைத் தயாரிக்கிறது அதானி குழுமம்



புதுடெல்லி, மார்ச்.4-

நாட்டின் நீளமான காற்றாலை இறக்கையை தயாரிக்க அதானி குழுமம் திட்டமிட்டுள்ளது.

குஜராத்தின் முந்த்ராவில் உள்ள தனது உற்பத்திப் பிரிவில், அதானி நியூ இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் 91.2 மீட்டர் நீளம் கொண்ட இந்தியாவின் மிக நீளமான காற்றாலை இறக்கைகளைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளது. இவை குறைந்த, நடுத்தர காற்று வீசும் இடங்களில் மின் உற்பத்தியை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட அடுத்த தலைமுறை காற்றாலைகளில் பயன்படுத்தப்படும்.

முந்த்ரா ஆலை தற்போது 78.6 மீட்டர் மற்றும் 80.5 மீட்டர் நீளமுள்ள இறக்கைகளை உற்பத்தி செய்து வருகிறது. புதிய 91.2 மீட்டர் இறக்கையானது வடிவமைப்பு சிக்கல், பொருட்கள் பொறியியல் மற்றும் உற்பத்தித் திறனில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது. இந்த 91.2 மீட்டர் இறக்கை ஒரு கால்பந்து மைதானத்தின் நீளத்துக்கு இணையானது.

அல்லது 30 மாடி கட்டிடத்தை விட உயரமானது. இது சுமார் 185 மீட்டர் விட்டம் கொண்ட சுழற்சி பரப்பை உருவாக்கும். முந்த்ரா ஆலையின் தற்போதைய உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 2.25 ஜிகாவாட்ஸ் ஆகும். இதை படிப்படியாக 10 ஜிகாவாட்ஸாக ஆக உயர்த்த அதானி குழுமம் திட்டமிட்டுள்ளது. காற்றாலை உற்பத்திக்காக இதுவரை ரூ.3,000 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு மாணவர்கள் வெளியேற ஈரான் அனுமதி



டெஹ்ரான், மார்ச்.4-

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் வான்வழி தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் போர் பதற்றம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. இந்நிலையில் ஈரான் கல்வி நிலையங்களில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்கள் நில எல்லைகள் வழியாக வெளியேற அனுமதிக்கப்படுவார்கள் என ஈரான் அரசு அறிவித்துள்ளது.

மேலும், மாணவர்கள் தங்கள் பருவ இறுதித் தேர்வுகளை பின்னர் எழுதவும், முனைவர் பட்ட ஆய்வறிக்கையை பின்னர் சமர்ப்பிக்கவும் அனுமதிக்கப்படுவார்கள், அதற்கான தேதிகள் பிறகு அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரானில் பல்கலைக்கழகங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. ஈரான் வான்வெளி சர்வதேச விமானங்களுக்கு மூடப்பட்டுள்ளது.

ஈரானை விட்டு வெளியேறுமாறு இந்திய மாணவர்களை அங்குள்ள இந்திய தூதரகம் தொடர்ந்து கேட்டுக்கொண்டது. எனினும் வான்வெளி மூடப்பட்டது உள்ளிட்ட பிற சவால்கள் வெளியேறும் முயற்சியை சிக்கலாக்கியுள்ளன. டெஹ்ரான், உர்மியா மற்றும் பிற பிராந்தியங்களில் உள்ள மாணவர்களுக்கு மருத்துவம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

# இறைச்சி கடைகளில் ஆடு வெட்ட தடை கோரி மனு: உயர் நீதிமன்ற அமர்வு தள்ளுபடி

சென்னை, மார்ச்.4-

மிருக வதை தடுப்பு சட்ட விதிகளை மீறி இறைச்சிக் கடைகளில் ஆடு, மாடுகளை வெட்ட தடை விதிக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இது தொடர்பாக விலங்குகள் நல ஆர்வலரான முரளிதரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு: மிருக வதை தடுப்புச் சட்டத்தில் ஆடு, மாடு, கோழி போன்ற உயிரினங்களை வெட்ட தனி இடங்களை ஒதுக்க வேண்டும், அங்கீகரிக்கப்பட்ட, உரிமம் பெற்ற இடங்களைத் தவிர மற்ற இடங்களில் அவற்றை வெட்டக் கூடாது என வரையறுக்கப்பட்டுள்ளது.

அதேபோல உயிருடன் உள்ள பிற விலங்குகளின் கண் முன்பாக அவற்றை வெட்டக் கூடாது. வெட்டப்படும் கால்நடைகளின் ரத்தத்தை முறையாக சேகரிக்க வேண்டும். ஆடுகளை வெட்ட அமைக்கப்பட்டுள்ள ஆட்டுத்தொட்டிகளில் கால்நடை மருத்துவரால் சான்றளிக்கப்படும் விலங்குகளை மட்டுமே வெட்ட வேண்டும் என சட்ட விதிகள் உள்ளன.

ஆனால் அனைத்து இறைச்சிக் கடைகளிலும் இந்த விதிகள் மீறப்படுகின்றன. இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு, மாடு, கோழிகளின் ரத்தம் நேரடியாக கால்வாய்களில் விடப்படுகிறது. இறைச்சிக் கழிவுகள் வெட்ட வெளியில் குப்பைத் தொட்டிகளில் போடப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

எனவே, சென்னையில் உள்ள இறைச்சிக் கூடங்களில் மிருக வதை தடுப்புச் சட்ட விதிகளையும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தர சட்ட விதிகளையும் கண்டிப்பான முறையில் பின்பற்ற சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிட வேண்டும். அதுவரை ஆடு, மாடுகளை வெட்ட தடை விதிக்க வேண்டும் என மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஆர்.சுரேஷ்குமார் தலைமையிலான அமர்வில் நடந்தது. அப்போது, எந்தெந்த இறைச்சிக் கடைகளில் இதுபோல விதிமீறல்கள் நடைபெறுகின்றன என்பதை குறிப்பிட்டு வழக்கைத் தொடராமல், பொத்தாம்பொதுவாக குற்றம்சாட்டி இந்த வழக்கை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாகக் கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# கோவில்பட்டி தீக்குச்சி குடோன் தீ விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 3ஆக உயர்வு

கோவில்பட்டி, மார்ச்.4-

கோவில்பட்டி தீக்குச்சி குடோன் தீ விபத்தில் சிக்கி படுகாயத்துடன் சிகிச்சை பெற்று வந்த மேலும் 2 பேர் உயிரிழந்தனர். தீக்காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த சுடலைமுத்து(42), கணேசன் (47) சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி மூக்கரை விநாயகர் கோயில் பகுதியைச் சேர்ந்தவர் முருகன். இவருக்கு சொந்தமான தீப்பெட்டி தொழிற்சாலை, பாண்டவர்மங்கலம் பகுதியில் செயல்பட்டு வருகிறது. நேற்று காலை தொழிலாளர்கள் தீக்குச்சி மூட்டைகளை இறக்கி வைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

தீக்குச்சி மூட்டையை இழுத்துச் சென்றபோது, உராய்வு ஏற்பட்டு திடீரென தீப்பிடித்தது. இதில் பிட்டராக வேலை பார்த்த கோவில்பட்டி அருகே விஜயாபுரியை சேர்ந்த சமுத்திரம் மகன் கார்த்திக்(27), கேரளாவை சேர்ந்த கணேசன்(47), விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே பேரநாயக்கன்பட்டியைச் சேர்ந்த சுடலைமுத்து(42) ஆகிய 3 பேர் மீதும் தீப்பற்றி எரிந்தது. தகவலறிந்து தீயணைப்பு வீரர்கள் வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். சுமார் 2 மணி நேர போராட்டத்துக்கு பின் மூவரையும் மீட்டனர். இதில் கார்த்திக் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், மேலும் 2 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் இன்று சிகிச்சை பெற்றவந்த 2 பேரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதுகுறித்து நாலாட்டின்புதூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முதல்வர் ஸ்டாலின் தூக்கத்தில் இருந்து எழுவாரா?’ நாங்குநேரி சம்பவத்தில் இபிஎஸ், விஜய் கண்டனம்



சென்னை, மார்ச்.4-

நாங்குநேரி கொலை சம்பவம் தமிழகத்தில் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ், தவெக தலைவர் விஜய் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

எடப்பாடி பழனிசாமி: நாங்குநேரி அருகே பெரும்பட்டு கிராமத்தில் அரங்கேறியுள்ள கொடூரம் ஏற்க முடியாத பெருங்குற்றம். பட்டியலின மக்கள் அதிகம் வசிக்கும் அந்த கிராமத்திற்குள் புகுந்த 9 பேர் கொண்ட மர்மகும்பல், அங்குள்ள தேநீர் கடை மீது பெட்ரோல் குண்டு வீசி நடத்திய கொலைவெறித் தாக்குதலில் இருவர் பரிதாபமாக உயிரிழந்து, 6 பேர் படுகாயத்துடன் சிகிச்சை பெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சட்டம் ஒழுங்கை ஒரு பொருட்டாக கருதாமல் விளம்பர ஆட்சி நடத்திய திமுக அரசின் அலட்சிய போக்கின் விளைவு தான் இந்த கொடூரக் கொலைகள். இது தங்கள் சமூகத்தைக் குறிவைத்து நடந்த தாக்குதல் எனவும், தங்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவும் அச்சத்துடன் போராடி வருகின்றனர் அக்கிராமத்தைச் சேர்ந்த பட்டியலின மக்கள். இதே நாங்குநேரி தொடங்கி, தென் மாவட்டங்களில் தொடர்ந்து நடக்கும் சமூக ரீதியான மோதல்களை தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தது திமுக அரசு? வேடிக்கை மட்டும் தானே பார்த்துக்கொண்டு இருந்தது?

தொடர்ந்து இப்பகுதியை பதற்ற நிலையிலேயே வைத்திருக்க வேண்டுமென்பது தான் திமுக அரசின் எண்ணமா? தேர்தல் நேர அறுவடைக்கு சமூக மோதல்களை வளர்த்து விடுகிறதா திமுக? என்ற கேள்விகளும் சந்தேகங்களும் மக்களிடையே எழுகிறது. வாய்கிழிய மேடைகளில் சமத்துவம் என்று பேசும் திமுக, தனது ஆட்சியில் சமூக மோதல்களைக் கட்டுப்படுத்தாமல் வேடிக்கை பார்ப்பது வெட்கக்கேடானது; கடும் கண்டனத்திற்குரியது. பெரும்பட்டு தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகள் அனைவர் மீதும் மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறோம்.

விஜய்: திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அருகே பெரும்பத்து கிராமத்தில் நேற்றிரவு இருசக்கர வாகனங்களில் சென்ற 9 பேர் கொண்ட கும்பல், சாலையில் சென்றவர்கள், டீக்கடை அருகே நின்றவர்கள் மீது ஆயுதங்களால் சரமாரியாகத் தாக்கியதில் இருவர் உயிரிழந்தனர். 5 பேர் வெட்டுக் காயம் அடைந்தனர் என்று வெளியான செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. இந்தக் கொலைவெறித் தாக்குதல், கடும் கண்டனத்திற்கு உரியது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, படுகாயம் அடைந்தவர்கள் விரைந்து குணமடைய விழைகிறேன்.

உலக நாடுகளுடன் போட்டி போடும் ஓர் ஆட்சியில் பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் எங்கே? இந்தியாவின் டாப் மாநிலத்தில் காவல் துறைக்குச் சட்டம் ஒழுங்கு டிஜிபி எங்கே? நம்பர்1 மாநிலம் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் ஆட்சியின் சட்டம் ஒழுங்கு லட்சணம் இதுதானா? போதைக் கும்பல் சுதந்திரமாக வன்முறை நிகழ்த்த இடம் தந்த பொறுப்புமிக்க ஆட்சி இதுதானா?

பொதுமக்கள் ஒவ்வொரு நாளும் புலம்பித் தவித்துக் கோபத்தில் கொந்தளித்துக் கேள்வி எழுப்பி வருகின்றனர். ஆட்சியே முடியப் போகிறது. இப்போதாவது காவல் துறையைக் கையில் வைத்திருக்கும் முதல்வர் தூக்கத்தில் இருந்து எழுவாரா? மக்கள் நலன்களை, அவர்தம் பாதுகாப்பைத் துளியும் யோசிக்காத இந்தத் திமுக ஆட்சி, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் தூக்கி எறியப்படுவது உறுதி உறுதி உறுதி.

# ரூ.23 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட இந்தோசாராசனிக் கட்டிடம் உயர் நீதிமன்ற கூடுதல் வளாகமாக செயல்பட தொடங்கியது



சென்னை, மார்ச்.4-

சுமார் 135 ஆண்டுகால பாரம் பரியமிக்க பழைய இந்தோ சாராசனிக் சட்டக்கல்லூரி வளாகம் ரூ. 23 கோடி செலவில் புனரமைக்கப்பட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தின் கூடுதல் வளாகமாக நேற்றுமுதல் செயல்படத் தொடங்கியது.

சென்னை பாரிமுனை பகுதியில் இயங்கி வரும் உயர் நீதிமன்ற வளாகத்தில் ‘மெட்ராஸ் லா காலேஜ்’ என 1891ம் ஆண்டு தொடங்கப்பட்ட சட்டக் கல்லூரி, பின்னாளில் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியாக பெயர் மாற்றப்பட்டது.இந்த சட்டக்கல்லூரி நிர்வாக காரணங்களுக்காக சில ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாக பிரிக்கப்பட்டு, செங்கல்பட்டு மாவட்டம் புதுப்பாக்கத்துக்கும், திருவள்ளூர் மாவட்டம் பட்டரை பெரும்புதூருக்கும் இடமாற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையில், சட்டக்கல்லூரி இயங்கி வந்த சுமார் 135 ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரம்பரியமிக்க இந்தோ சாராசனிக் கட்டிடம், ரூ.23 கோடி செலவில் பழமை மாறாமல் புனரமைக்கப்பட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தின் கூடுதல் வளாகமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த வளாகம், தற்போதைய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையில் கடந்த ஆண்டு அக்டோபரில் திறக்கப்பட்டது. எழில்மிகு தோற்றத்துடன் விசாலாமான நீதிமன்ற அறைகளுடன் அமைந்துள்ள இந்த கூடுதல் வளாகத்தில் நேற்று முதல் 6 நீதிமன்றங்கள் தனது அன்றாட நீதிபரிபாலன பணிகளை தொடங்கியுள்ளன.இந்த நீதிமன்றங்களுக்கு பழைய வழக்கப்படி ‘ரோமன் நம்பர்களில்’ எண்கள் பெயரிடப்பட்டுள்ளன. புதிய வளாகத்தில் முதல் நாளான நேற்று தலைமை நீதிபதி எம்.எம்.ஶ்வஸ்தவா மற்றும் நீதிபதி ஆர்.சுரேஷ்குமார் தலைமையிலான அமர்வு முதல் நீதிமன்றத்திலும், நீதிபதி ஜி.கே.இளந்திரையன் இரண்டாவது நீதிமன்றத்திலும், நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி மூன்றாவது நீதிமன்றத்திலும், நீதிபதி டி.வினோத்குமார் நான்காவது நீதிமன்றத்திலும், நீதிபதி கே.குமரேஷ் பாபு ஐந்தாவது நீதிமன்றத்திலும், நீதிபதி ஆர்.சக்தி வேல் ஆறாவது நீதிமன்றத்திலும் அமர்ந்து உரிமையியல், குற்றவியல் மற்றும் ரிட் வழக்குகளின் இறுதி விசாரணைகளை மேற்கொண்டனர்.

இங்கு செயல்பட்ட பழைய மெட்ராஸ் சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்ற இந்நாள் மூத்த வழக்கறிஞர்கள் பலர், சீரமைக்கப்பட்ட வளாகத்தை பார்வையிட்டு, பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். பல வழக்கறிஞர்கள் செல்பி எடுத்தும், குழு புகைப்படம் எடுத்தும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.



# சென்னை தகராறு குறித்து விசாரிக்கச் சென்ற உதவி ஆய்வாளர், காவலரை தாக்கிய இருவர் கைது

சென்னை, மார்ச்.4-

போலீஸார் மீது தாக்குதல் நடத்திய இருவர் கைது செய்யப்பட்டனர். சென்னை, கொருக்குப் பேட்டை, எம்எஸ் நாயுடு தெருவில் டாஸ்மாக் மதுபானக் கடை உள்ளது. அதனருகே சிலர் தகராறில் ஈடுபடுவதாக போலீஸாருக்கு நேற்று முன்தினம் புகார் சென்றது.

இதையடுத்து, கொருக்குப்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் தனசேகரன், காவலர் ராஜ்குமார் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அப்போது, அங்கு தகராறு செய்து கொண்டிருந்த 3 இளைஞர்களை கண்டித்து, அங்கிந்து செல்லுமாறு போலீஸார் எச்சரித்தனர்.

இதில், போலீஸாருக்கும், அவர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. உடனே அந்த நபர்கள் உதவி ஆய்வாளர் தனசேகரனையும், காவலர் ராஜ்குமாரையும் தாக்கினர்.

இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த பொதுமக்கள், காயமடைந்த போலீஸாரை மீட்டு ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அதே வேளையில், தாக்குதல் சம்பவம் குறித்து தகவலறிந்து அங்கு வந்த கொருக்குப்பேட்டை போலீஸார், அங்கிருந்த 3 பேரில், இருவரை பிடித்து காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்தனர்.

இதில், பிடிபட்டவர்கள் பழைய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த மணிகண்டன் (26), அதேப் பகுதியைச் சேர்ந்த ரமேஷ் (40) என்பது தெரிய வந்தது. இதையடுத்து, இருவரையும் போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நாங்குநேரி கொலை: 6 பேரிடம் விசாரணை பொதுமக்கள் சாலை மறியலால் போலீஸார் குவிப்பு



நெல்லை, மார்ச்.4-

நாங்குநேரி பெரும்பத்து பகுதியில் சாலை ஓரத்தில் நின்றவர்கள் மீது 9 பேர் கொண்ட கும்பல், அரிவாளால் தாக்கியதில் வடமாநில தொழிலாளி உள்பட 2 பேர் பலியாகினர். இந்நிலையில், சம்பவத்தில் ஈடுபட்டதாக கருதப்படும் ஆறு பேரை பிடித்து திருநெல்வேலி மாவட்ட காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

நெல்லை மாவட்டம் நாங்குநேரி காவல் சரகம் , பெரும்பத்து பஜாரில், பைக்கில் வந்த 9 பேர் கொண்ட மர்ம கும்பல், அங்கு சாலையில் நின்று கொண்டிருந்த, பொதுமக்களை சரமாரியாக வெட்டியது. இந்த சம்பவத்தில் வடமாநில செங்கல் சூளை தொழிலாளி உள்பட இரண்டு பேர் பலியாகினர்.

நாங்குநேரி பெரும்பத்து பகுதிக்கு 9 பேர் கொண்ட மர்ம கும்பல் பைக்கில் வந்தது. அவர்கள் அங்குள்ள டீ கடை அருகே நின்று கொண்டிருந்த நபர்களை சரமாரியாக வெட்ட ஆரம்பித்தபோது, அங்கு நின்ற பொதுமக்கள் அங்கிருந்து ஓடினர். அவர்கள் கண்மூடித்தனமாக வெட்டியதில் 6 பேருக்கு பலத்த வெட்டுக் காயம் விழுந்தது.

இந்த கொடூர தாக்குதலில் பெரும்பத்து இந்திரா காலனியை சேர்ந்த ஜான் (42) மற்றும் பெயர் தெரியாத வடமாநில செங்கல் சூளை தொழிலாளி ஆகிய இரண்டு பேரும் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே இறந்தனர். மேலும் படுகாயம் அடைந்த பெரும்பத்து பகுதியைச் சேர்ந்த ஆபிரகாம் மகன் நெல்சன் (58), பால்வண்ணன் மகன் பிரபாகரன், வைகுண்டம் மகன் ராமசாமி, வீராங்குளம் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் கணேசன் (53) ஆகியோர் காயமடைந்தனர்.

மேலும் சம்பவ இடத்திலிருந்து தப்பித்துச் சென்ற எதிரிகள், புளியங்குளம் அருகே சென்றபோது அந்த பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகன் சசிகுமார் என்பவரையும் அரிவாளால் தாக்கியுள்ளனர். அவர்கள் அனைவரும் நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அசம்பாவிதங்களைத் தடுக்க அங்கு ஏராளமான போலீஸார் குவிக்கப்பட்டு உள்ளனர்.

தப்பி ஓடிய கொலையாளிகளை கைது செய்ய காவல்துறையினர் தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி தாக்குதலில், 2 பேர் பலியான நிலையில் 5 பேர் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர், திருநெல்வேலி முகாம் தென் மண்டல காவல்துறை தலைவர் ஐஜி விஜயேந்திர பிதாரி, திருநெல்வேலி சரக காவல்துறை தலைவர் டி.ஐ.ஜி சரவணன், திருநெல்வேலி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் எஸ்.பி டாக்டர் பிரசன்ன குமார் தலைமையில் விரிவான ஆலோசனை தற்போது நடைபெற்று வருகிறது.

சம்பவத்தில் ஈடுபட்டதாக கருதப்படும் 6 பேரை பிடித்து திருநெல்வேலி மாவட்ட காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என திருநெல்வேலி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் எஸ்.பி டாக்டர் பிரசன்ன குமார் தகவல் அளித்துள்ளார். மேலும், தற்போது நாங்குநேரியில் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளதால், அங்கு போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# “சொன்னால் செய்தே முடிப்பார்!” அமைதிப்பூங்கா மக்களின் தாகம் தீர்த்த மக்கள் தொண்டன் அமைச்சருக்கு கிராம மக்கள் பாராட்டு



திண்டுக்கல், மார்ச்,4-

திண்டுக்கல் மாவட்டம் சித்தரேவு ஊராட்சிக்குட்பட்ட அமைதிப்பூங்கா கிராம மக்களின் நீண்ட நாள் தாகத்தைத் தீர்க்கும் வகையில், தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மருதாநதி குடிநீர் திட்டத்தை அதிரடியாகத் தொடங்கி வைத்துள்ளார்.

மனு கொடுத்த வேகத்தில் தீர்வு

அமைதிப்பூங்கா கிராம மக்கள் தங்களுக்கு மருதாநதி குடிநீர் வேண்டுமென அமைச்சரிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர். பொதுமக்களின் சிரமத்தை உணர்ந்த அமைச்சர், அடுத்த கணமே ரூ. 22.55 லட்சம் ஒதுக்கீடு செய்து, புதிய குழாய்கள் மூலம் குடிநீர் கொண்டு வர உத்தரவிட்டார்.

குழாயைத் திறந்து வைத்த அமைச்சர்

திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் நடைபெற்ற விழாவில், அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் குடிநீர் குழாய்களைத் திறந்து வைத்து விநியோகத்தைத் தொடங்கி வைத்தார். பின்னர் அவர் பேசுகையில்:

"ஆத்தூர் தொகுதியில் குடிநீர் பிரச்சினை என்ற சொல்லே இருக்கக்கூடாது. ஒவ்வொரு வீட்டிற்கும் தங்குதடையின்றி தூய்மையான குடிநீர் கிடைக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது," என்றார். என்றும் அமைச்சருடன்... மக்கள் உறுதி!

குடிநீர் குழாயிலிருந்து தண்ணீர் பொங்கி வந்ததைக் கண்ட கிராம மக்கள், உற்சாகத்தில் அமைச்சருக்குப் பாராட்டு தெரிவித்தனர். "கோரிக்கை விடுத்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுத்த அமைச்சருக்கு நாங்கள் என்றும் உறுதுணையாக இருப்போம்," என அமைதிப்பூங்கா மக்கள் ஒருமனதாக உறுதி அளித்தனர். நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர் முருகன், அய்யம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் ரேகா அய்யப்பன், பேரூர் கழக தங்கராஜ், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், உதவி பொறியாளர்கள் இராமநாதன், பாலன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுரேஷ், ஊராட்சி செயலாளர் பாறைப்பட்டி கண்ணன், சித்தரேவு மணிமாறன், அய்யம்பாளையம் சுந்தர், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ சர்வதேச தமிழ் பண்பாட்டு பல்கலைக்கழகம் நடத்திய மாபெரும் மதிப்பீடு முனைவர் பட்டம் அளிப்பு விழா சென்னை மயிலாப்பூர் தெற்கு மாவட்ட வீதியில் ஹோட்டல் கற்பகம் இன்டர்நேஷனல் கலையரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் உயர்நீதிமன்றத்தின் சிறப்பு வாய்ந்த ஓய்வு பெற்ற நீதி அரசர் திருமதி வெங்கடேசன் மற்றும் அவரது தொடர்பாளர் கலைமாமணி டாக்டர் அம்பிகா அவர்களின் திருக்கரங்களாலும் 150 க்கு மேற்பட்ட பல்வேறு துறைகளில் சாதனை நிகழ்த்தி, அவர்களை அடையாளம் டாக்டர் சட்ட ஆலோசகர் மற்றும் மனித உரிமைகள் வழக்கறிஞர் துணை வேந்தர் மணிகண்ட ராஜாவிகி(சிஷி)விலி'றிபி. ஞி, அவர்களின் முன்னிலையில் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் கொற்றவை நாகராஜன் மற்றும் முக்கிய பிரமுகர்களுடன் ஈரோடு பேராசிரியர் கோ தங்கவேல் அவர்களுக்கு கல்வியியல் முனைவர் என்னும் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



■ மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) ஆ.முத்துசரவணன் ஆகியோர் உள்ளனர்.

**வருவாய்கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மதுரை 625020**

ஓ.மு.எண்: E-4220433/2026/டி

கு.சிவா
S/O.குருசாமி,
எண் : 3234 நல்லையா நாயக்கர் தெரு, அலங்காநல்லூர்
வாடிப்பட்டி வட்டம்
மதுரை மாவட்டம்
பின்கோடு625501

மனுதாரர்

எதிர்

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
மதுரை.

எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் மகள் சி.பிரதிகா த/பெ. சிவா, என்பவர் கடந்த 17.09.2020 ம், ஆண்டு தேதியில் மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் நல்லையா நாயக்கர் தெரு கதவு எண் : 3234 என்ற முகவரியில் எனது வீட்டில் இறந்ததற்கான இறப்புச் சான்றிதழ் கோரி விண்ணப்பித்து உள்ளார். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ள நாளிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி மதுரை வருவாய் கோட்டாட்சியர் அலுவகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். இவை தவறும் பட்சத்தில் மனுதாரர் கோரியபடி உத்தரவாகும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மனுதாரர் பெயர்
கு.சிவா
அலங்காநல்லூர்
செல்: 9943775284



## பரங்கிமலை சென்னை கடற்கரை இடையே பறக்கும் ரயில் சேவை 7ம் தேதி முதல் தொடக்கம்

சென்னை, மார்ச்.4-

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் நடைபெற்று வரும் மறுசீரமைப்பு பணி காரணமாக பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொகிறார்கள். இந்தநிலையை சமாளிக்க, ரெயில்வே நிர்வாகத்துடன் நடை பெற்ற ஆலோசனைப்படி சென்னை கடற்கரை செங்கல்பட்டு வழித்தடத்தில் "ஷட்டில் மின்சார சேவைகள்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இன்று முதல் 12 பெட்டிகள் கொண்ட மின்சார ரயிலில் கூடுதலாக 3 பெட்டிகள் இணைத்து 15 பெட்டிகள் கொண்ட மின்சார ரயில் சேவைகள் எக்ஸ்பிரஸ் வழித்தடத்தில் இயக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதேபோல, பரங்கிமலை சென்னை கடற்கரை இடையே பறக்கும் ரயில் வழித்தடத்தில் வருகிற 5ந்தேதி பாதுகாப்பு கமிஷனர் சோதனை மேற்கொள்கிறார். வருகிற 7ந்தேதி முதல் பறக்கும் ரயில் சேவை தொடங்கப்படவுள்ளது. எழும்பூர் ரெயில் நிலையத்தின் 10வது நடைமேடை வழியாக அடுத்த 20 முதல் 22 நாட்களுக்குள் ரெயில்களை இயக்கும் வகையில் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# “காமேனி படுகொலையில் மோடி அரசின் மவுனம் நடுநிலையல்ல; பொறுப்பை துறப்பது” சோனியா காந்தி



புதுடெல்லி, மார்ச்.4-

ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில், மத்திய அரசு மவுனம் காப்பது நடுநிலை அல்ல என்று காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார். மேலும், சர்வதேச ஒழுங்கு சீர்குலைந்துள்ள இந்த நிலையில் மவுனம் என்பது பொறுப்பைத் துறப்பதற்குச் சமம் என்று விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக ஆங்கில நாளிதழ் ஒன்றில் அவரது கட்டுரை வெளியாகியுள்ளது. அதில் சோனியா காந்தி, ‘‘பிப். 28ம் தேதி அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து நடத்திய தாக்குதல்களில் ஈரான் உச்சத் தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டதை மார்ச் 1 அன்று ஈரான் உறுதிப்படுத்தியது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து வந்த நிலையில், அதற்கு நடுவில் பதவியில் இருக்கும் ஒரு நாட்டின் தலைவரை கொல்வது சர்வதேச உறவுகளில் தீவிர சிக்கலை ஏற்படுத்தும்.

அதிர்ச்சிகரமான இந்த விவகாரத்தில் இந்தியா காக்கும் மவுனம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அந்த படுகொலையையும் ஈரானின் இறையாண்மை மீறலையும் இந்திய அரசு கண்டிக்காமல் தவிர்த்துள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தொடங்கிவைத்த தாக்குதல்களைப் பற்றி குறிப்பிடாமல், ஈரான் மேற்கொண்ட பதிலடி தாக்குதலை மட்டுமே பிரதமர் நரேந்திர மோடி கண்டித்துள்ளார். அதோடு, இந்த விவகாரம் “ஆழ்ந்த கவலையை” ஏற்படுத்துவதாகவும், “பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்” என்றும் பொதுவான கருத்துகளை மட்டுமே பிரதமர் மோடி வெளியிட்டார்.

ஒரு வெளிநாட்டு தலைவர் கொல்லப்பட்டது குறித்து, இறையாண்மை அடிப்படையிலும், சர்வதேச சட்டத்தின் அடிப்படையிலும் இந்தியா தனது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால், அப்படி ஒரு தெளிவான நிலைப்பாடு இந்திய அரசிடம் இருந்து வெளிப்படவில்லை. இது நமது வெளிநாட்டுக் கொள்கையின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்குகிறது.

இந்தச் சூழலில் மவுனம் நடுநிலையல்ல. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா, கொள்கை அளவிலான எதிர்ப்பை வெளிப்படுத்தாவிட்டால், சர்வதேச நெறிமுறைகள் சீரழிவதை அது எளிதாக்கும். சர்வதேச ஒழுங்கு சீர்குலைந்துள்ள இந்த நிலையில், மவுனம் என்பது பொறுப்பைத் துறப்பதாகும். இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்.

கொலை நடந்ததற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொண்டு, அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசுக்கு முழு ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார்.

புவி அரசியலைத் தாண்டி இந்தச் சம்பவத்தின் தாக்கங்கள் உலகம் முழுவதும் பரவி வருகின்றன. இந்தியாவின் நிலைப்பாடு இந்த துயரத்திற்கு மறைமுக ஒப்புதலாகத் தோன்றுகிறது.

ஈரான் மீதான குண்டுவீச்சுகளையும் திட்டமிட்ட படுகொலைகளையும் காங்கிரஸ் கட்சி கண்டித்துள்ளது.

ஏப்ரல் 2001ல், அப்போதைய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டபோது, ஈரானுடனான இந்தியாவின் ஆழமான வரலாற்று மற்றும் நவீன உறவுகளை உறுதிப்படுத்தியதை தற்போதைய அரசு நினைவில் கொள்ள வேண்டும்.

‘வசுதைவ குடும்பகம்’ (‘‘உலகமே ஒரு குடும்பம்’’) என்ற இந்திய சிந்தனை வெறும் விழாக்கால கோஷமல்ல. அது நீதி, கட்டுப்பாடு மற்றும் உரையாடலுக்கான அர்ப்பணிப்பைக் குறிக்கிறது’’ என்று தெரிவித்துள்ளார்.



# “திமுக காயத்திற்கு மருந்து போடாது, கட்டு மட்டுமே போடும்!” மதுரையில் செல்லூர் ராஜு விளாசல்

மதுரை, மார்ச்.4-

மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோவில்பாப்பாகுடி ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் வடிகால் வாய்க்கால் அமைப்பதற்கான பூமி பூஜை இன்று நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும், மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினருமான செல்லூர் கே. ராஜு கலந்துகொண்டு பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த அவர், திமுக அரசு மற்றும் ஓ.பி.எஸ் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார். அவரது பேட்டியின் முக்கிய அம்சங்கள்:

*1. திமுகவுக்குத் தேர்தல் பயம்!*

"அதிமுகவின் 15 அம்ச தேர்தல் அறிக்கையைப் பார்த்து முதல்வர் ஸ்டாலினுக்குத் தோல்வி பயம் வந்துவிட்டது. எடப்பாடியாரின் வாக்குறுதிகளால் அவருக்குத் தூக்கமே வரவில்லை. தற்போது முதியோர் உதவித்தொகையாக ரூ.2,000 வரவு வைப்பது எல்லாம் தேர்தலுக்கான 'தில்லுமுல்லு' வேலை. திமுக காயத்திற்கு மருந்து போடாது, வெறும் கட்டு மட்டும் தான் போடும்."

*2. ஓபிஎஸ் அரசியல் அஸ்தமனம்!*

"எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோரின் கொள்கைக்கு எதிராக ஓ.பி.எஸ் செயல்படுகிறார். அன்று சட்டமன்றத்தில் ஜெயலலிதாவிற்கு நடந்த கொடுமைகளை மறந்துவிட்டு அவர் திமுகவிடம் சென்றுவிட்டார். 2021 முதலே திமுகவின் பிடீமாகச் செயல்பட்ட அவரின் அரசியல் வாழ்வு இப்போது அஸ்தமனமாகிவிட்டது."

*3. திமுகவில் நிர்வாகிகள் குமுறல்!*

"அதிமுகவிலிருந்து செல்பவர்களுக்குத் தான் திமுகவில் பதவி கிடைக்கிறது. காலம் காலமாக உழைத்த திமுக உடன்பிறப்புகளுக்குப் பொறுப்பு கிடைப்பதில்லை. இதனால் அக்கட்சியின் நிர்வாகிகள் கடும் கோபத்தில் உள்ளனர், இது முதல்வருக்குத் தெரியவில்லை."

கடந்த மார்ச் 1 நடந்த கூட்டணி கட்சி பொதுக்கூட்டதில் மைக்செட் ஆப்ரேட்டர் ஏதோ பாடலை போட்டு விட்டார் அதை மீடியாக்கள் டிரெண்டிங் ஆக்கிவிட்டீர்கப்பா...என்று கலகலப்பாக பேசி சிரித்து கொண்டு நாற்காலி விட்டு எழந்து சென்று விட்டார்.



# நாங்குநேரி இரட்டைக் கொலை சம்பவம்: தமிழக காங்கிரஸ் கண்டனம்

சென்னை, மார்ச்.4-

‘நாங்குநேரி அருகே நடைபெற்றுள்ள கொடூரமான இரட்டை கொலைச் சம்பவம் தமிழக மக்களை மிகுந்த அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அமைதி பூங்காவாக உள்ள தமிழகத்தில் இதுபோன்ற குற்றச் செயல்கள் ஏற்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது’ என தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி அருகே நடைபெற்றுள்ள கொடூரமான இரட்டை கொலைச் சம்பவம் தமிழக மக்களை மிகுந்த அதிர்ச்சியிலும் வேதனையிலும் ஆழ்த்தியுள்ளது. வடமாநில தொழிலாளி உட்பட இரண்டு பேர் அரிவாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ள இந்த சம்பவத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் கடுமையாக கண்டிக்கிறேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கொடூரச் சம்பவத்தில் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகளையும் விரைவாக கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான நடவடிக்கை எடுக்க காவல்துறை உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அமைதி பூங்காவாக உள்ள தமிழகத்தில் இதுபோன்ற குற்றச் செயல்கள் ஏற்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இனி வரும் காலங்களில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க காவல் துறை மிகுந்த விழிப்புணர்வுடன் பணியாற்ற வேண்டுமென வலியுறுத்துகிறேன்’ எனத் தெரிவித்தார்.

# கிளாம்பாக்கத்தில் விரைவில் பயன்பாட்டுக்கு வருகிறது ரயில், பேருந்து நிலையத்தை இணைக்கும் ஆகாய நடைபாதை



கிளாம்பாக்கம், மார்ச்.4-

கிளாம்பாக்கம் ரயில் நிலையம் பேருந்து நிலையத்தை இணைக்கும் ஆகாய நடைபாதை ரூ.79 கோடியில் கட்டப்பட்டு வரும் நிலையில், வரும் மார்ச் மாத இறுதியில் பயன்பாட்டுக்கு வரும் என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கிளாம்பாக்கம் ரயில் நிலையம் முதல் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரையும் ஜி,எஸ்,டி சாலையை கடக்கவும் ஆகாய நடைபாதை ரூ.79 கோடியில் கட்டப்பட்டு வருகிறது. 279 மீட்டர் நீளமும் 8 மீட்டர் அகலமுடன் அமைக்கப்படுகிறது.

இந்த ஆகாய நடைபாதை பணிகளுக்கான ஆலோசகராக ஐஐடி மதராஸ் சார்ந்த நகர்ப்புறமயமாக்கல், கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CUBE) நியமிக்கப்பட்டு அவர்கள் தெரிவித்த ஆலோசனைப்படி பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்கள் எளிதாக பயன்படுத்தவும் பயணிகள் வசதிக்காகவும் சாலையை கடக்க இரு முனைகளிலும் 6 நகரும் படிக்கட்டுகள், 4 லிப்ட்கள் மற்றும் வழுக்காத தரைத்தளம் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மாநகர பேருந்து நிறுத்தம் அருகே உள்ள நடைபாதையின் தளம், இருக்க வேண்டிய மட்டத்தைவிட சற்று அதிகமாக கீழ்நோக்கி இருப்பதால் பயணிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளதாக புகார் எழுந்தது.

இதனால் ஆகாய நடைபாதை பணியை பரிசோதித்த ஐஐடி மெட்ராஸ் ‘கியூப்’ (CUBE) அமைப்பு ஆய்வு செய்து சில மாற்றங்களை தெரிவித்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் இதனை முற்றிலும் சி.எம்.டி.ஏ அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

கிளாம்பாக்கம் ரயில் நிலையம், பேருந்து நிலையத்தை இணைக்கும் ஆகாய நடைபாதை பணிகள். |<em>படங்கள்: எம்.முத்துகணேஷ்</em> |</p></div>

கிளாம்பாக்கம் ரயில் நிலையம், பேருந்து நிலையத்தை இணைக்கும் ஆகாய நடைபாதை பணிகள். | படங்கள்: எம்.முத்துகணேஷ் |

ஐஐடி மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் ‘கியூப்’ (CUBE) அமைப்பு தெரிவித்த ஆலோசனையின் படியே பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சி.எம்.டி.ஏ அதிகாரி ஒருவர் கூறியது: பயணிகள் வசதிக்காக 79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பிரம்மாண்ட ஆகாய நடைபாதை கட்டப்பட்டு வருகிறது.

இந்த நடைபாதை பணிகள் ஓரளவு நிறைவடைந்திருக்கும் நிலையில் சில தொழில்நுட்பச் சிக்கல்கள் ஏற்பட்டதாக கூறப்படுவது உண்மை யில்லை. நடைபாதை பணி ஐஐடி மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் ‘கியூப்’ (CUBE) அமைப்பு தெரிவித்த அறிக்கையின்படியே நடைபெற்று வருகிறது. வரும் மார்ச் மாத இறுதியில் பயன்பாட்டுக்கு வரும் என்றார்.

# ஒரே மைதானம் 3000 வீரர்கள் கின்னஸ் சாதனை படைத்த திருப்பூர் பி.வி.பி பள்ளி



திருப்பூர்: மார்ச்.04-

திருப்பூர் அருகே விஜயாபுரத்தில் உள்ள பாரதி வித்யா பவன் (BVB) சீனியர் செகண்டரி பள்ளியில்,

ரோவர்ஸ் (Rovers) அமைப்பு மற்றும் பி.வி.பி பள்ளிகள் இணைந்து, கின்னஸ் உலக சாதனை நிகழ்ச்சி விளையாட்டுப் போட்டிகள் கடந்த பிப்ரவரி 28 மற்றும் மார்ச் 01, ஆகிய 2 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. இந்த கின்னஸ் சாதனை நிகழ்ச்சியின் முதல் நாளில் பல்வேறு தடகளப் போட்டிகளும், இரண்டாவது நாளில் மாணவர்களின் வலிமை, ஒழுக்கம் மற்றும் பாரம்பரிய தற்காப்புக் கலைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் சிலம்பம் மற்றும் கராத்தே போட்டிகளும் நடைபெற்றன. இதில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 3,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் விளையாட்டு போட்டியில் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியைத் திருப்பூர் மாவட்டக் கல்வி அதிகாரி எம். மணிமாறன் (M.Sc., B.Ed., M.Phil.) தொடங்கி வைத்தார். பி.வி.பி பள்ளிகளின் தலைவர் டாக்டர். செல்வராஜ் மற்றும் தாளாளர் டாக்டர். நளினி செல்வராஜ் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு நினைவு பரிசு,பாராட்டு சான்றிதழ் வழங்கினர். இதில் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மண்டல காசாக்ராண்ட் (Casagrand) நிறுவனத்தின் மார்க்கெட்டிங் மேலாளர் திரு. சரத்குமார் மற்றும் கோவை ஹூண்டாய் (Kovai Hyundai) நிறுவனத்தின் ஏ.ஜி.எம் திரு. சையத் முகமது ரியாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

மாவட்டக் கல்வி அதிகாரியால் தொடங்கி வைக்கப்பட்ட ஒலிம்பிக் ஜோதியை சுமந்து வந்த மாணவர்களான சுமஅபினவ் கிருஷ்ணா, கேஜஸ்வின், T. தன்ஷிகா, கே. கீர்த்திகா, எஸ். அஸ்மத் ஹசனா, பி. பகத், எஸ்.ஏ. தரணி தரன், எம். தஸ்னீம், டி. லக்ஷனா, எஸ். அனீஷ், T.C. மோகித் வர்ஷன் மற்றும் எஸ். நக்ஷத்ரா ஆகியோர் தங்களது திறமையை வெளிப்படுத்தினர். ஒற்றுமை, விளையாட்டு உணர்வு மற்றும் சிறந்து விளங்குதலைக் குறிக்கும் வகையில், பள்ளியின் தலைவரின் புதல்வி நக்ஷத்ரா மற்றும் சிறப்பு விருந்தினர்கள் இணைந்து ஒலிம்பிக் ஜோதியை ஏற்றி வைத்தனர்.

ஒவ்வொரு பிரிவிலும் ஓட்டப்பந்தயம் கராத்தே சிலம்பம் ஆகிய போட்டியில் மூன்று வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் மலேசியாவில் நடைபெறவிருக்கும் சர்வதேச இறுதிப் போட்டிகளில் பங்கேற்க உள்ளனர்.



■ ஈரோடு மொடக்குறிச்சி கணபதிபாளையத்தில் உலக மகளிர் தின விழாவை முன்னிட்டு, யாதுமாகி நிற்பவள் அறக்கட்டளையின் சார்பாக பெண் ஆளுமைகளுக்கு அடையாள அட்டை வழங்கும் விழா மருத்துவர் கோ தமையந்தி அவர்களின் இல்லத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் தலைவர் ர. மோனிஷா, பொதுச் செயலாளர் பூ பிரவீனா, செயற்குழு உறுப்பினர் மு மாலினி ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் அறக்கட்டளையின் எதிர்கால திட்டங்கள் பற்றி கலந்து ஆலோசிக்கப்பட்டது. அறக்கட்டளையின் நிறுவன புன்னகை தூரன் இரா.சங்கர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



■ மதுரை ஓ.சி.பி.எம். பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு பொது தேர்வு மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், ஆய்வு செய்தார்.



■ கயத்தாறு பேரூராட்சியில் ஆஸ்பத்திரி சாலையில் புதியதாக உயர் மட்ட சின்டெக்ஸ் தொட்டி மூலம் குடிநீர் சப்ளை செய்ய பேரூராட்சி மன்ற பொது நிதியில் இருந்து ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் சின்டெக்ஸ் தொட்டி கட்ட பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த நிகழ்ச்சியை கயத்தாறு பேரூராட்சி மன்ற தலைவர் சுப்புலட்சுமி இராஜதுரை தொடங்கி வைத்தார்.இதில் கயத்தாறு திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னப்பாண்டியன், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் நயினார் பாண்டியன் செல்வகுமார் லெட்சுமணன் மற்றும் கயத்தாறு நகர துணை செயலாளர் குருசாமி பாண்டியன், காந்தையாபாண்டியன், கண்ணன், முன்னாள் கவுன்சிலர்கள் சேக்தாவூது, சந்தானம் மற்றும் வழக்கறிஞர் மாரியப்பன், தகவல் தொழில்நுட்ப பிரிவு துணை செயலாளர் கார்த்திக், கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# “சொன்னபடி நடக்கும்... மீறினால் சட்டம் பாயும்!” ஒட்டன்சத்திரத்தில் எஸ்பி பிரதீப்பின் மாஸ் வார்னிங்



ஒட்டன்சத்திரம் மார்ச்.4-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் பாதுகாப்புப் பணிகள் மற்றும் முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP) பிரதீப் அவர்கள் இன்று செய்தியாளர்களைச் சந்தித்து விளக்கமளித்தார். *இந்தச் சந்திப்பில் எஸ்.பி.பிரதீப் கூறியதாவது:*

"வாக்காளர்கள் எவ்விதச் சிரமமுமின்றித் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்பதே எங்களின் நோக்கம். இதற்காக ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் மின்விளக்கு, குடிநீர் மற்றும் கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் முறையாக உள்ளதா என்பதை நேரில் ஆய்வு செய்துள்ளோம். குறைகள் கண்டறியப்பட்ட இடங்களில் உடனடியாகச் சரிசெய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது."

*காவல்துறையினருக்குச் சிறப்புப் பயிற்சி*

தேர்தல் நாளில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், அமைதியான முறையில் வாக்குப்பதிவை நடத்தவும் காவல்துறையினருக்குத் தீவிரப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. பதற்றமான வாக்குச்சாவடிகளைக் கண்டறிந்து அங்கு கூடுதல் பாதுகாப்புப் படைகளை நிலைநிறுத்தவும், ரோந்துப் பணிகளை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

* வதந்தி பரப்புவோருக்கு எச்சரிக்கை*

சமூக வலைதளக் கண்காணிப்பு குறித்துப் பேசிய எஸ்.பி., "வாட்ஸ்அப், ஃபேஸ்புக் போன்ற இணையதளங்களில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைத் தூண்டும் விதமாகவோ அல்லது தேர்தலைப் பற்றி தவறான வதந்திகளையோ பரப்புவோர் மீது தயவுதாட்சண்யமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் அதிகாரப்பூர்வத் தகவல்களை மட்டுமே நம்ப வேண்டும்."

*உயர் அதிகாரிகள் பங்கேற்பு*

இந்தச் செய்தியாளர் சந்திப்பின் போது, ஒட்டன்சத்திரம் துணை காவல் கண்காணிப்பாளர் (ஞிஷிறி) கார்த்திகேயன், காவல் ஆய்வாளர் தங்கராஜ் மற்றும் பல காவல் துறை உயர் அதிகாரிகள் உடனிருந்தனர். காவல்துறையின் இந்த விரிவான பாதுகாப்புத் திட்டங்கள் மக்களிடையே பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.




# திசையன்விளையை அதிரவைத்த அய்யா வைகுண்டர் அவதார தின வாகனப் பேரணி

திசையன்விளை மார்ச். 04-

அய்யா வைகுண்டரின் 194 வது அவதார தின விழாவை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் அய்யாவழி பக்தர்கள் உற்சாகக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, திருச்செந்தூர் அய்யா வைகுண்டர் அவதார பதியிலிருந்து சாமிதோப்பு நோக்கிப் புறப்பட்ட பிரம்மாண்ட வாகனப் பேரணிக்குத் திசையன்விளையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சாமிதோப்பு பூஜித குரு பையன் ஸ்ரீராம் சுவாமிகள் தலைமையில் நேற்று நூற்றுக்கணக்கான வாகனங்களில் பக்தர்கள் புறப்பட்டனர். உடன்குடி மற்றும் தட்டார்மடம் வழியாக திசையன்விளை வந்தடைந்த இந்தப் பேரணிக்கு, சுடலை ஆண்டவர் கோவில் அருகே தொழிலதிபர் சேம்பர் செல்வராஜ் இல்லத்தின் முன்பு பட்டாசு வெடித்து பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதில் தொழில் அதிபர்கள் சேம்பர் செல்வராஜ்,சேம்பர் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரெட்டியார் பட்டி நாராயணன் ,காங்கிரஸ் பிரமுகர் விஜய பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர். பின்னர் முத்துக்குடைகள் தாங்கி ,செண்டா மேளதாளத்துடன் அய்யா வழி பக்தர்கள் ஊர்வலம் வடக்கு பஜார், பேருந்து நிலையம், காமராஜர் சிலை, பழைய பஸ் நிலையம், அற்புத விநாயகர் கோயில் சந்திப்பு வழியாக எருமைக் குளம் சென்றது. காமராஜர் சிலை அருகில் குமாரபுரம் பஞ்சாயத்து தலைவர் அனிதா பிரின்ஸ் ஏற்பாட்டில் திரைப்பட தயாரிப்பாளர் டிபி சரவணன் மற்றும் எஸ் பி சுதாகர் ஆகியோர் முன்னிலையில், அய்யாவின் அன்புக்கொடி மக்களுக்கு கூல் ட்ரிங்ஸ் பிஸ்கட் பழங்கள் வழங்கப்பட்டன. வரும் வழியில் குளிர் பானங்கள், நீர் மோர், பழங்கள்,உணவு பொட்டலம் ஆகியவை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. வாகன பேரணி நவ்வலடி, கூடன்குளம், செட்டிகுளம், அஞ்சுகிராமம் வழியாக இரவு நாகர் கோவில் நாகராஜா கோவிலை சென்றடைந்தது.



# ஒரே நாளில் 136 பேருக்குப் பணி ஆணை! தென்காசியில் கலெக்டர் காட்டிய அதிரடி

தென்காசி, மார்ச்.4-

தென்காசிமாவட்டம் கொடிக்குறிச்சி ஸ்ரீ நல்லமணி யாதவா கல்லூரியில், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் 136 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் 42 தனியார் நிறுவனங்கள் மற்றும் 767 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர். அதில் 136 நபர்களுக்கு பணிநியமண ஆணை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், உதவித் திட்ட அலுவலர்கள், சரவணபாண்டியன், டேவிட் ஜெயசிங், பிரபாரகரன், சிவக்குமார் மற்றும் தனியார் நிறுவனங்கள், வேலைநாடுநர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு வருவாய் துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 8 வது நாளாக மாநிலம் தழுவிய வேலை நிறுத்தம் மற்றும் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.



■ சென்னையில் உள்ள திமுக கட்சி தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனு பெறப்பட்டது. இதில் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆய தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி தனது விருப்ப மனுவை வழங்கினார். அருகில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ .பிரகாஷ், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார், குறிஞ்சி முன்னேற்ற பேரவை மாநில தலைவர் குறிஞ்சி ப.சந்திரசேகரன், திமுக மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் கி.வீரமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகத்தின் சார்பில் 2024 ஆம் ஆண்டில் சிறப்பாக பணிபுரிந்த நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் உள்ளார்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000